## தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் மற்றும் அதன் துணைக்கம்பனிகள்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம் - நிறுவகம்

நிதிக்கூற்றுக்களானவை தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**அபிப்பிராயம் - ஒருங்கிணைப்பு**

நிதிக்கூற்றுக்களானவை தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் மற்றும் அதன் துணைக்கம்பனியின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 தேசிய வியாபார முகாமைத்துவப் பாடசாலை நிதிக்கூற்றுக்கள்

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் முழு உரிமையுள்ள ஒருங்கிணைப்பு நிறுவகமாக தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலை 2011 ஒக்டோபர் 07 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

#### 1.2.2 தொடர்புடைய தரப்பினருடன் உள்ள கொடுக்கல்வாங்கல்களை வெளிப்படுத்தாமை

தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலையை ஸ்தாபிப்பது தொடர்பான செயற்பாடு நிகழ்ந்த காலப்பகுதியில் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் நிர்வாக சபையில் அங்கத்தவராகச் செயற்பட்ட ஒருவர் தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலையின் கணக்காய்வாளராகச் செயற்படும் தொழிற்துறை கணக்காய்வுக் கம்பனியின் பங்காளராகவும் செயற்பட்ட போதிலும் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.3 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் தேறிய சொத்துக்கள் ஒரு ரூபாவாகக் காண்பிக்கப்பட்ட 13 விடயங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1991 இன் 28 ஆம் இலக்க தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் 6 ஆம் பிரிவு | பணிப்பாளர் நாயகம், அமைச்சரால் நியமிக்கப்பட்ட மூவருடன் வேறு வியாபார நிறுவகங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஏழு அங்கத்தவர்களுடன் 11 பேரை நிர்வாகச் சபை கொண்டிருக்க வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக இலங்கை கைத்தொழில் ஆலோசனைச் சபையின் தலைவர், தேசிய அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர் மற்றும் வர்த்தக வங்கிச் சங்கத்தின் தலைவர் போன்ற அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>இந் நிறுவகம் செயற்படாமையால் உரிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட முடியாதுள்ளதாகவும் தற்போது தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவக அதிகாரச்சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தலைவரால் 2013 மார்ச் மாதம் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 மே 30 ஆம் திகதிய 09/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | இரு பணிப்பாளர்களுக்கும் ஒரு பிரிவுத் தலைவர் பதவிவகிக்கும் ஓர் உத்தியோகத்தருக்கும் நேரப் பதிவு இயந்திரத்தின் வருகை மற்றும் வெளிச் செல்லல் பதிவுசெய்கையில் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2011 மார்ச் 08 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ4/47/7/276/1 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் 5 ஆம் பிரிவு | பதவியணி ஆட்சேர்க்கையில் அவர்களின் கல்வித் தகைமைகளின் சரியான தன்மை தொடர்பாக பரீட்சைகள் திணைக்களத்தில் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) | 2010 திசெம்பர் 14 ஆம் திகதிய பீஈடீ 55 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்காக திறைசேரிப் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தால் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கை 7.4.5 ஆம் பிரிவு | நிலையான சொத்துத் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தால் மீளாய்வாண்டின் போது பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் வரிக்குப் பின்னைய ரூபா 380,802,552 தொகையான தேறிய மிகை இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான தேறிய மிகை ரூபா 244,475,986 ஆகக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 136,326,566 ஆல் அதிகரித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானம், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 32 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வரிக்குப் பின்னரான இலாபம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 56 சதவீதமான அதிகரிப்பைக் காண்பித்தது. விபரம் பின்வருமாறாகும்.

| | 2012 ரூபா மில் | 2011 ரூபா மில் | முரண் ரூபா மில் | சதவீதம் |
|---|---|---|---|---|
| செயற்பாட்டு வருமானம் | 957.07 | 726.56 | 230.51 | 32 |
| விற்பனைக் கிரயம் | 340.21 | 281.54 | 58.67 | 21 |
| மொத்த வருமானம் | 616.87 | 445.02 | 171.84 | 39 |
| செயற்பாட்டு இலாபம் | 420.49 | 291.82 | 128.66 | 44 |
| நிதிச் செலவினம் | 0.80 | 0.17 | 0.63 | 371 |
| நிதி வருமானம் | 1.52 | 1.40 | 0.12 | 9 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 421.21 | 293.05 | 128.16 | 44 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 380.80 | 244.48 | 136.33 | 56 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையீனங்கள்

நிறுவகத்தின் நிரந்தரப் பதவி வகிக்கும் 13 விரிவுரையாளர்கள் 2012 சனவரி மாதம் முதல் 2012 செப்தெம்பர் வரையான காலப்பகுதியின் போது கைவிரலடையாளப் பதிவு இயந்திரத்தில் வருகையும் வெளிச்செல்லலும் பதிவு செய்யப்பட்டு கடமை நேரத்தில் தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலையில் 887.75 மணித்தியாலங்கள் விரிவுரை நடாத்தியிருந்தனர். தற்போது இவ்விரிவுரைக் காலம் குறைக்கப்பட்டுள்ளதாக தலைவரால் 2014 மார்ச் மாதத்தில் அறிவித்திருந்தார்.

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

பட்டப் பாடநெறிகள் தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலையால் நடாத்தப்பட்டு வரப்படுகின்றமையால் மீளாய்வாண்டின் போதான தேசிய வியாபார முகாமைத்து நிறுவகத்தின் ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாட்டு வருமானத்தை முன்னைய ஆண்டிற்கான வருமானத்துடன் ஒப்பிடப்படுகையில் 17 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையான சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| பிரிவு | 2012 | 2011 | குறைந்த அளவு | குறைந்த அளவு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | |
| முகாமைத்துவப் பயிற்சி மற்றும் வினைத்திறன் | 285.88 | 345.70 | 59.82 | 17 |
| கணனிப் பயிற்சி | 229.14 | 304.52 | 75.39 | 25 |
| மொழி | 54.06 | 71.64 | 17.58 | 25 |

**3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

நிறுவகத்தின் யாழ்ப்பாணக் கிளைகள் மூடப்பட்டிருந்தமையால் அக் கிளைகளில் உள்ள கட்டிடங்களில் இருந்து அகற்றப்பட்ட பகுதிகள் விற்பனை செய்யப்பட்டமையால் ரூபா 5,243,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

**3.4 பதவியணி நிர்வாகம்**

நிறுவகத்தின் முகாமைத்துவ மற்றும் தகவல் முறைமைப் பிரிவின் பணிப்பாளர் பதவி வகிக்கும் பெண் உத்தியோகத்தர் தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலையின் கணனிப் பிரிவில் பிரிவுத் தலைவராக செயற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. நிறுவகத்தின் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தருக்கு வேறு நிறுவகத்தில் நிரந்தர பதவியில் செயற்படுவதற்காக கட்டுப்பாட்டுச் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் 2012 ஆம் ஆண்டிற்காகத் திருத்தப்பட்ட ஒருங்கிணைந்த கணக்குகள் கணக்காய்விற்காக 2013 திசெம்பர் 11 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கண்டிக் கிளைக்காக ஓர் புதிய கட்டிடம் 5 வருட காலத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூபா 1.5 மில்லியன் படி ரூபா 90 மில்லியனுக்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு 2012 செப்தெம்பர் 17 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கட்டிடத்திற்காகச் செலுத்தப்பட்ட பாதுகாப்புப் பிணை மற்றும் கட்டிடத்தின் கூறாக்கலுக்காக ஏற்கப்பட்ட ரூபா 26,668,360 தொகையான செலவினம் தொடர்பாக 2012 ஆம் ஆண்டில் பாதீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினத்திற்காக ரூபா 2,000,000 தொகையான செலவினம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதில் எவ்வித செலவினமும் ஏற்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் நிறுவகத் தலைவரது கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்து முகாமைத்துவம்
(ஆ) பாடநெறிகள் நடாத்தல்
(இ) மனித வள முகாமைத்துவம்